இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 117 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 21 – வியாழக்கிழமை 07 டிசம்பர் 2023 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 117 : Thiruvalluvar Year - 2054 - Karthigai 21 - Thursday 07 December 2023 - Chennai 8 Pages ₹ 5.00

## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (14)

# உள்ளம் உலைக்களம்; உறுதி போர்க் கருவி!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

வாள் தூக்கிப் போர் புரிந்தவர்கள் அல்லர் - வரிசைப்படுத்திய படைகளை அணிவகுத்திடச் செய்து அதிகார வரம்பை அதிகப்படுத்திக் கொண்டவர்களும் அல்லர்.

பேனாவே போர்வாள் - சிந்தனையே சைன்யம் - ஆம்! 18 ஆம் நூற்றாண்டில் - 1694 முதல் 1778 வரையில் வாழ்ந்த வால்டேர், 1712 முதல் 1778 வரையில் வாழ்ந்த ரூசோ, இந்த எழுத்து வேந்தர்கள், அமெரிக்கப் புரட்சிக்கும், பிரஞ்சுப் புரட்சிக்கும் அடித்தளம் அமைத்த இரட்டையர்கள் என்றே வரலாற்று ஏட்டில் வர்ணிக்கப்பட்டார்கள். இருவரின் எழுத்துகளும் - எடுத்து வைத்த கருத்துகளும் சில பல வேளைகளில் மோதிக் கொள்ளும் இயல்புடையவை ஆயினும், இருவருமே மனித சமுதாயத்தை மையமாக வைத்தே தங்கள் எழுத்துப் பணியை ஆற்றினார்கள். உலகப் புகழ்பெற்ற அந்த இருவரில் ஒருவரான ரூசோ, அவர் பிறந்த கதையைப் பற்றி அவரே எழுதியிருப்பது கண்ணீரில் தோய்த்து வழங்கப்பட்டதாகும்.

இது, அது : -


"நான் 1712ஆம் வருடம், ஜெனிவா நகரில், ஐசக் ரூஸோ என்பவருக்கும், சூசான் பெர்னார்ட் என்ற பெண்மணிக்கும் மகனாகப் பிறந்தேன். மிதமான பிதுரார்ஜிதச் சொத்து, பதினைந்து பிள்ளைகளுக்கிடையில் பங்கிடப்பட்டதால், அவர்களில் ஒருவரான என் தந்தைக்கு கிடைத்த பங்கு மிகச் சொற்பமே! அவர் கடிகாரத் தொழிலை தம் பிழைக்கும் தொழிலாகக் கொண்டார். அதில் அவர் மிகவும் கெட்டிக்காரராகவே இருந்தார். என் தாய் நல்ல நிலையில் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர். இளம் வயதிலிருந்தே இருவரும் நெருங்கிப் பழகி வந்தவர்கள். இவர்கள் இருவரின் ஆசைப் பிணைப்பை வெட்ட முனைந்த ஒரு சூழ்நிலை, இவர்களின் பாசப் பிணைப்பை இறுக்கிடவே உதவியது. தான் விரும்பியவள், தனக்கு கிடைக்க மாட்டாள் என்று தந்தை சோக சாகரத்தில் ஆழ்ந்தார். இந்த நேரத்தில் என் தாயின் சகோதரன், என் தந்தையின் சகோதரி ஒருத்தியை மணக்க ஆசைப்பட்டார். அவர் செய்த தந்திரத்தால் என் தாயின் தந்தை, என் தாய் தந்தையரின் மணத்துக்கு ஒப்புக் கொண்டார். மணமாகி முதல் குழந்தை பிறந்த பிறகு என் தந்தை பிழைப்பு காரணமாக கான்ஸ்டான்டிநோபிள் பட்டினத்துக்குச் சென்றார். என் தந்தை வெளியூருக்குப் பிரிந்துபோன பிறகு, என் தாயின் அழகும், புத்தி சாதுரியமும், அவளுடைய பாட்டு, படிப்பு, ஓவியம், கவிதை முதலான கலைத் திறமைகள் எல்லாம் பல ரசிகர்களை உண்டாக்கியது. ரசிகர்களில் ஒருவர் ரசிகத் தன்மையை அளவு மீறிக் கொண்டு போனதால் என் தாயை அடைய ஆசை கொண்டார். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள என் அம்மாவுக்குக் கற்பை விட, என் தந்தையின் மீது அளவற்ற அன்பு இருந்ததால், தந்தையை உடனடியாக ஊர் திரும்பும்படியாகக் கடிதம் எழுதினாள். தந்தையும் திரும்பி வந்தார். அந்தக் கூடலின் அறுவடையாக, துன்பக் கனியாய், அவர் திரும்பி வந்த பத்து மாதங்களுக்குப் பிறகு, பலவீனமான குழந்தையாகப் பிறந்தேன். என் பிறப்பு என் தாயின் உயிரை விழுங்கியது. எனது துன்பங்கள் அனைத்திலும் என் முதல் துன்பம் என் பிறப்புதான்!"

இவ்வாறு தனது முதல் துன்பம் தனது பிறப்புத்தான் என்று குறிப்பிடும் ரூசோ; 2-7-1778 அன்று

**கலைஞர் கடிதம்**

உயிர் விட்டபோது அவருக்கு இழைக்கப்பட்ட-அல்லது இயற்கையாகவே அமைந்த கடைசித் துன்பம் என்ன என்பதை அறிவிக்காமலே மறைந்து விட்டார் என்பதா? அல்லது மறைத்து விட்டனர் என்பதா?

அதற்கிடையே அவர் வரலாற்றுக்குள் நுழைந்து பார்ப்போம் -



**ரூசோ**

1725ஆம் ஆண்டில் ரூசோ, தனது 13வது வயதிலேயே தடை செய்யப்பட்ட நூல்களையெல்லாம் வாங்கிப் படிக்கத் தொடங்கினார். இளைஞர்கள் அமைப்பு ஒன்றில் தன்னை இணைத்துக் கொண்டார். சிறு வயது முதலே ரூசோ தன் பெயரை எழுதும்போது, "ஜீன் ஜேக் ரூசோ ஜெனிவாவின் குடிமகன்" என்று குறிப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இந்த அளவிற்கு இவர் ஜெனிவாவின் மீது பற்று கொண்டிருந்த போதிலும், அவருடைய நூல்கள் அந்த நாட்டில் பகிரங்கமாக தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. ஜெர்மனியிலே பிறந்த கார்ல் மார்க்சுக்கு எப்படி ஜெர்மனியிலே இடமில்லையோ, இத்தாலியிலே பிறந்த மகாகவி தாந்தேவுக்கு எப்படி இத்தாலியிலே இடமில்லையோ அதைப் போலவே ஜெனிவாவிலே பிறந்த ரூசோ அந்த நாட்டிலிருந்தே வெளியேற்றப்பட்டார்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## 'மிக்ஜாம்' புயல் – கடும் சேதங்களை சரி செய்திட இடைக்கால நிவாரணமாக

# ரூ.5,060 கோடி வழங்கிட பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, பிரதமரிடம் முதல்வரின் கடிதத்தை நேரில் சந்தித்து வழங்குகிறார்!

**சென்னை, டிச. 7-**

**'மிக்ஜாம்' புயல் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள கடும்சேதங்களை சரி செய்திட இடைக்கால நிவாரணமாக ரூபாய் 5,060 கோடி வழங்கிடக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். இந்தக் கடிதத்தை நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு பிரதமர் அவர்களிடம் நேரில் வழங்குகிறார்.**

தமிழ்நாட்டில் 'மிக்ஜாம்' புயல் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களை சீர்செய்திட இடைக்கால நிவாரணமாக ரூபாய் 5,060 கோடி வழங்கிடக் கோரி இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (5.12.2023) அன்று கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழ்நாட்டில் கடந்த 2, 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில் தாக்கிய 'மிக்ஜாம்' புயல் காரணமாக பெய்த வரலாறு காணாத பெருமழையின் காரணமாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களில் மிக அதிகமான மழைப்பொழிவு பெறப்பட்டது. இதன் காரணமாக, இந்த நான்கு மாவட்டங்களில், குறிப்பாக சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மிகக் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. சாலைகள், பாலங்கள், பொது கட்டடங்கள் என பல்வேறு உட்கட்டமைப்புகள் சேதம் அடைந்துள்ளன.

மேலும், இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் விளக்கமாகக் குறிப்பிட்டு, தமிழ்நாட்டிற்கு, இடைக்கால நிவாரணமாக குறிப்பிட்ட தலைப்புகளின் கீழ் ரூ. 5,060 கோடியினை உடனடியாக வழங்கிடுமாறு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், 'மிக்ஜாம்' புயலால் பெய்த கனமழையின் காரணமாக ஏற்பட்ட சேதங்களைக் கணக்கிடும் பணி தற்போது துவங்கப்பட்டுள்ளது என்றும், முழு விவரங்கள் சேகரிக்கப்பட்ட பின்னர், விரிவான சேத அறிக்கை தயார் செய்யப்பட்டு, கூடுதல் நிதி கோரப்படும் என்றும் தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சேதமடைந்த பகுதிகளைப் பார்வையிட ஒன்றிய அரசின் குழுவினை தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைக்குமாறும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2023) சென்னை, நேப்பியர் பாலம் அருகில், கூவம் ஆற்றின் முகத்துவாரத்தில் மழை நீர் சீராக வடிகிறதா என்பதை பார்வையிட்டார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.